# குச்சவெளி பிரதேச சபை

# திருக்கோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 13ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் திருத்தப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான திருத்திய நிதிக்கூற்றுக்கள் 20 ஏப்பிரல் 2015 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குச்சவெளி பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்நன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேரேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நானாவித வைப்பு மீதி ரூபா.4,221,592 ஆகக் காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி ரூபா.4,981,534 ஆகக் காட்டப்பட்டதினால் நானாவித வைப்பு மீதி ரூபா.759,942 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒப்பந்தக்காரர் வைப்பு மீதி ரூபா.7,568,037 ஆகக் காணப்பட்டபோதிலும் நிதிக்கூற்றுக்களில் அம்மீதி ரூபா.7,851,797 ஆகக் காட்டப்பட்டதினால் நானாவித வைப்பு மீதி ரூபா.283,760 தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சினால் நன்கொடையாக வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா.1,480,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் 09 ஆண்டுகளுக்கு முன்னர் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 18 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்குகளுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 32 ஆண்டுகளுக்கு முன்னர் கடமையை விட்டு விலகிய 05 ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா.8,500 கூட்டுமொத்த தொகையை மீளளிப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடமையை விட்டு விலகிச் சென்ற மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 15 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா.548,729 தொகையை அறவிடுவதற்கு 03 தொடக்கம் 05 ஆண்டுகள் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணிகளும், கட்டடங்களும் | 79,151,944 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் | 13,690,632 | நிலையான சொத்துப் பதிவேடுகள், மெய்மையாய்வுச் சபைஅறிக்கைகள் |
| தளபாடங்கள் | 2,547,653 | |
| மோட்டார் வாகனம் | 15,813,186 | |

1.3.4 தொங்கல் கணக்கு

------------------------------------

2005ஆம் ஆண்டு தொடக்கம் தொங்கல்கணக்கு செலவு மீதியாக ரூபா.1,523 தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| பகுதி II பிரிவு 19(i) (i) | உள்;ராட்சி அமைச்சின் முன் அனுமதியின்றி 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை சபையினால் 41 ஊழியர்களை தற்காலிக அடிப்படையில் நியமித்து ரூபா.5,428,984 தொகை சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1989ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விதி ஒழுங்குகள் | |
| விதி இலக்கம் 571(2),(3) | 1996ஆம் ஆண்டு தொடக்கம் அரசிறை பேரிலான வைப்பு ரூபா.156,650 நிதிக்கூற்றுக்களில் 16 ஆண்டுகளாக காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா.15,328,480 தொகையை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா.4,435,483 தொகையை விளைவித்திருந்தமையானது நிதிசார் விளைவுகளில் ரூபா.10,892,997 முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2013 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 50,003 | 6,445 | 4,413 |
| வாடகை | 5,175 | 7,290 | 2,865 |
| சேவைகளுக்கான கட்டணம் | 6,023 | 2,167 | 6,928 |
| அரசிறை வருமானம் | 14,260 | 17,196 | 518 |
| ஏனைய வருமானங்கள் | 18,749 | 9,105 | 458 |

#### 2.2.2 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக கட்டணம் அறவிடல்

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக சபையினால் கட்டணங்கள் அறவிடப்படாததால் சபை வருடாந்தம் ரூபா.33,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 18 வாகனங்கள் எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கையில், 574 களஞ்சியப் பொருட்களும் 1,574 நூலகப் புத்தகங்களும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) பொது நிர்வாக அமைச்சின் 15/2001 இலக்கம் கொண்ட 2001 ஆகஸ்ட் 07ஆந் திகதிய மற்றும் 09/2009 இலக்கம் கொண்ட 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அலுவலகங்களிலும் நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட போதிலும் அவ்வாறான நேரப்பதிவு இயந்திரத்தை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறாத ரூபா.15,605 கூட்டுமொத்த தொகையான காசோலைகளை வழங்கிய நபர்களுக்கு எதிராக இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்@ராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் 2015 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்@ராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு